1724 924

# HISTORY OF INDIA

## BOOK II

## FOR STANDARD IV

(TAMIL)

28 MAR 1940
MADRAS

BY

K. GOVINDACHARI, M.A., L.T.,
Superintendent, Primary Department, Sri. M. Ct. Muthiah Chettiar High School, Madras.

3588
372.2

THE EDUCATIONAL PUBLISHING CO.,
THYAGARAYANAGAR :: MADRAS
1939.

# இந்து தேச சரித்திரம்

## இரண்டாம் புத்தகம்

(நான்காம் வகுப்புக்கு உரியது)

954

28 MAR 1940
MADRAS

ஆசிரியர் :

K. கோவிந்தாசாரி, M. A., L. T.

சூபரின்டென்டென்டு, பிரைமரி டிபார்ட்மென்டு,

Sir M. CT. முத்தையா செட்டியார் உயர்தர கலாசாலை, சென்னை.

3588

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி

தியாகராயநகர், சென்னை.

பதிப்புரிமை] 1939. [விலை அணா நான்கு

KABEER PRINTING WORKS
195, HIGH ROAD, TRIPLICANE

# முகவுரை

'இந்து தேச சரித்திரம்' என்னும் இச் சிறு நூல், நான்காம் வகுப்புப் பிள்ளைகட்கு என்று எழுதப்பட்டது. இதில் உள்ள கதைகள், அவ்வகுப்புப் பிள்ளைகட்கு எளிதில் புரியும்படியான எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. கதைகளை விளக்கப் போதிய படங்கள் தரப்பட்டுள்ளன. இந்நூல், கல்வி அதிகாரிகள் அண்மையில் வெளியிட்டுள்ள பாட இயலின்படி (Syllabus) தயார் செய்யப்பட்டது. இந் நூல், பிள்ளைகட்குத் தேச உணர்ச்சியை ஊட்டும் என்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

K. கோவிந்தாசாரி.

# பொருள் அடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. நமது தேசம்—இயற்கை அமைப்பு | ... | 1 |
| 2. நமது தேசம்—புகழ் பெற்ற பெரியோர்கள் | ... | 4 |
| 3. மஹா அலெக்சாண்டரும் போரஸனும்—I. | ... | 6 |
| 4. ,, ,, —II. | ... | 8 |
| 5. அசோகர் | ... | 12 |
| 6. கி. பி., கி. மு. என்னும் இரண்டின் அர்த்தம் | ... | 20 |
| 7. குப்த மன்னர்களின் கீர்த்தி | ... | 23 |
| 8. ஹர்ஷ வர்த்தனர் | ... | 27 |
| 9. மகம்மது நபி | ... | 31 |
| 10. பல்லவர்கள்—மஹாபலிபுரம் | ... | 33 |
| 11. இராஜ புத்திரர்கள் | ... | 38 |
| 12. இந்தியா மீது மகம்மதியர் படையெடுப்பு | ... | 40 |
| 13. கிருஷ்ண தேவ ராயர் | ... | 43 |
| 14. அக்பர் | ... | 47 |
| 15. ஷாஜஹானும் தாஜ்மஹாலும் | ... | 50 |
| 16. கிளைவ் பிரபு | ... | 53 |
| 17. விக்டோரியா மஹா ராணியார் | ... | 56 |
| 18. ஸ்தல சரித்திரம் | ... | 58 |

# இந்து தேச சரித்திரம்

## இரண்டாம் புத்தகம்

[நான்காம் வகுப்புக்கு உரியது]

### 1. நமது தேசம்—இயற்கை அமைப்பு

நமது இந்தியா, மலைத் தொடர்களாலும் கடலினு லும் காக்கப்படுகின்ற தேசம். வடக்கிலிருக்கும் இமய



1. இமயமலை

மலைத் தொடர் ஐந்து மைலுக்கு மேல் உயரமானது. அது, பனியினல் எப்பொழுதும் மூடப்பட்டு இருக்கிறது.

நம் நாட்டின் வடமேற்கிலும் வட கிழக்கிலும் மலைத் தொடர்கள் உண்டு. அவற்றுள் கணவாய்கள் உண்டு. அக் கணவாய்களின் மூலமாகத்தான் வெளியார் நம் தேசத்திற்கு வந்தார்கள்.

கங்காநதி இம்மலைத் தொடரிலிருந்து கீழிறங்கி வருகிறது; சமவெளிக்குப் பெரு நன்மையை விளக்கிறது. கங்கையைப்போலவே சிந்து நதியும் இமயமலையில் உற்பத்தி ஆகிறது. சிந்து நதியிலிருந்துதான் 'இந்தியா' என்னும் பெயர் நம் தேசத்திற்கு வந்தது. சிந்து நதியின் கிளை நதிகளாவன: ஜீலம், சீனுப், ராவி, பியாஸ், சட்லெஜ். இந்த ஐந்து நதிகள் பாயப் பெறுகின்ற நிலம் 'பஞ்சாப்' எனப்படும். இதில் முற்காலத்தில் பல சிறு இராஜ்யங்கள் இருந்தன.

விந்திய மலையும் நர்மதை ஆறும் நம் தேசத்தை வடஇந்தியா, தென்இந்தியா என்று இரு பாகங்களாகப் பிரிக்கின்றன. வட இந்தியாவில் வெகு காலத்துக்கு முன் இருந்த இராஜ்யங்கள் பாஞ்சாலம், கௌரவம், காசி, விதேகம், மகதம், வங்கம், கலிங்கம் என்பன.

நர்மதை நதிக்குத் தெற்கில் 'தக்ஷிணம்' என்னும் பிரிவு இருக்கிறது. அதில் இருந்தவை ஆந்திர, சாளுக்கிய, பல்லவ, சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்கள். இந்தியாவுக்குத் தெற்கில் உள்ள இலங்கைத் தீவு ஒரு தனிஇராஜ்யமாக இருந்தது.

மஹாநதி, கோதாவரி, கிருஷ்ணு, காவேரி, தாமிரபர்ணி, முதலிய நதிகள் தக்ஷிணத்தைச் செழிப்பாகச்


இந்து
தேசப்படம்.
திபேத்து
ராஜபுதனம்
வங்காளம்
கல்கத்தா
பம்பாய்
கோதாவரி
மைசூர்
காவேரி
சென்னப்பட்டணம்
இலங்கை

2. இந்தியா தேசம்

செய்பவை. தக்ஷிணத்தார், நதி தீரங்களில் பல்வகைத் தானியங்களையும் சாகுபடி செய்துவந்தார்கள். தக்ஷிணத்தில் முத்து, கெம்பு, பச்சை முதலிய விலை உயர்ந்த இரத்தினங்களும் கிடைத்து வந்தன. மலைப் பிரதேசங்களில் சந்தன மரம், யானைத்தந்தம் முதலியனவும் கிடைத்து வந்தன. இத்தகைய சிறப்பு வாய்ந்த தேசத்துப் புகழ் பெற்ற மக்களின் சரித்திரத்தைப் பின் வரும் பாடங்களில் படிப்போம்.

### கேள்விகள்

1. இந்தியா படத்தைப் பார்த்து முக்கியமான நதிகளைக் குறிப்பிடுக.
2. 'பஞ்சாபில்' இருக்கும் நதிகள் எவை?
3. வட இந்தியாவையும் தென்னிந்தியாவையும் பிரிக்கின்ற மலையும் நதியும் எவை?
4. தக்ஷிணத்திலுள்ள இராஜ்யங்களின் பெயர்களைச் சொல்லுக.
5. நமது தேசத்தைச் சிறப்பு வாய்ந்த தேசம் என்று ஏன் சொல்ல வேண்டும்?

## 2. நமது தேசம்—புகழ் பெற்ற பெரியோர்கள்

புகழ்பெற்ற மன்னர் பலர் நமது தேசத்தை ஆண்டு வந்தார்கள். அவர்கள் தெய்வ பக்தியுள்ளவர்கள்; பல வீரச் செயல்களைச் செய்த பெரியோர்கள்.

வெளி தேசத்தார் பலர் இந்தியாவைக் கைப்பற்ற

வந்தார்கள். வெளியார் சிலர் இந்தியாவைக் கொள்ளை அடித்தார்கள்; ஏராளமான பொருளை எடுத்துச் சென்றார்கள். சிலர் இந்தியாவில் தங்கி விட்டார்கள்; அவர்கள் இராஜ வம்சங்களை ஏற்படுத்தினார்கள்; சிறப்பு வாய்ந்த பட்டணங்களையும், கட்டிடங்களையும் கட்டினார்கள். அவர்கள் செய்த நன்மையை இப்போதும் காணலாம். அவர்கள் ஆண்ட சில நகரங்கள் பாழடைந்தும் சில நகரங்கள் மணலினால் மூடப்பட்டும் மறைந்து போயின. அக்காலத்துக் கல் சிற்பிகளின் திறமையான வேலைப்பாட்டை இன்றும் பல கோவில்களில் பார்க்கலாம்.

பல்லவ அரசர்கள் ஏற்படுத்தின மஹாபலிபுரத்தில் உள்ள சிற்ப வேலைகளின் சிறப்பை என்ன என்பது! அங்குச் சென்றவர்கள் அச்சிறப்பை அதிசயத்துடன் பார்த்துச் சந்தோஷப்படுகிறார்கள். பாண்டிய அரசர்களின் சிறப்பை மதுரையில் இன்றும் காணலாம். திருமலை நாயக்கர் அரண்மனையைப் பார்த்து ஐரோப்பியரும், நாயக்க மன்னர்களின் திறமையை மெச்சுகிறார்கள். தஞ்சாவூரில் உள்ள பிரஹதீஸ்வரர் கோயில் சோழ அரசர்களால் கட்டப்பட்டது. அது தென்னிந்தியாவில் உள்ள அதிசயங்களுள் ஒன்றாக விளங்குகிறது.

இந்தக் காட்சிகளைக் கண்ட உடன், நமக்குச் சந்தோஷம் ஏற்படுகிறது; நமது தேசத்தின் புகழ் பெற்ற மன்னர்களின் சரித்திரத்தைப் படிக்க ஆவல் உண்டா

கிறது. நாம், மத ஆசாரியர்கள் வாழ்க்கையையும், இராஜ புத்திரர் வீரத் தன்மையையும், விஜய நகர மன்னர்களின் அரிய செயல்களையும் அடுத்து வரும் பாடங்களில் படித்து மகிழலாம்.

### கேள்விகள்

1. மஹாபலிபுரம், மதுரை, தஞ்சாவூர் இந்த நகரங்களின் சிறப்பு யாரால் ஏற்பட்டது?

2. இந்தியாவுக்கு வந்த வெளி தேசத்தார் என்ன செய்தார்கள்?

## 3. மஹா அலெக்சாண்டரும் போரஸும்—I

ஐரோப்பாக் கண்டத்தில் கிரீஸ் என்று ஒரு தேசம் இருக்கிறது. அதில் ஒரு பாகம் மாசிடோனியா என்பது. அந்த நாட்டைப் பிலிப் என்ற ஓர் அரசர் ஆண்டு வந்தார். அந்த அரசருடைய கீர்த்தி பெற்ற மகன் அலெக்சாண்டர். இந்தத் தைரியமுள்ள இராஜ குமாரர் சிறு வயதிலேயே குதிரைச் சவாரியில் தேர்ச்சி அடைந்த சமர்த்தர். இவர், தந்தை இறந்த பிறகு மாசிடோனியாவுக்கு அரசரானார். இவர் உலகத்தை ஜெயிக்க வேண்டுமென்ற எண்ணங் கொண்டார்; பெரிய சேனையைச் சேர்த்தார்; கிரீஸ் தேசம் முழுவதையும்

3. அலெக்சாண்டர்

ஜெயித்தார்; பிறகு எகிப்து, சிறிய ஆசியா, பாக்டிரியா, பாரசீகம் முதலிய தேசங்களைத் தம் வசம் ஆக்கிக் கொண்டார்.

இவர் பிறகு வடமேற்கிலுள்ள கைபர் கணவாயின் வழியாக இந்தியாவிற்கு வந்தார்; அட்டாக் என்ற இடத்




4. அலெக்சாண்டரின் சாம்ராஜ்யம்

தில் சிந்து நதியைக் கடந்தார்; கடந்தவுடன் கிரேக்க தெய்வங்களுக்குப் பலி கொடுத்தார்; தம் சேனைக்கு முப்பது நாள் ஓய்வு கொடுத்தார். வீரர்கள் பந்தயம் ஓடினார்கள்; சந்தோஷத்துடன் கூத்தாடினார்கள். ஒரு

மாதம் சென்ற பிறகு மீண்டும் சேனை புறப்பட்டது. தக்ஷ சீலம் என்ற இடத்து மன்னன் அலெக்சாண்டர் வருகையை அறிந்து பயந்தான். அவன் அலெக்சாண்டருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக ஒப்புக்கொண்டான்; தன் சேனை முழுவதையும் அலெக்சாண்டருக்கு உதவியாக அனுப்பினன். அலெக்சாண்டர் அன்புடன் பொன் பாத்திரங்களையும் பாரசீகக் கம்பளங்களையும் அந்த இராஜனுக்கு வெகுமதியாகக் கொடுத்தார்.

### கேள்விகள்

1. மஹா அலெக்சாண்டர் யாருடைய புதல்வர்? அவர் எண்ணம் என்ன?
2. அவர் ஜெயித்த தேசங்கள் எவை?
3. தக்ஷசீலத்து அரசனைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

## 4. மஹா அலெக்சாண்டரும் போரஸும்—II

ஜீலம் நதிக்கரையில் ஆண்டு வந்த இந்திய அரசர் **போரஸ்.** அவர் மிகுந்த தைரியசாலி; பெரிய தேச அபிமானி. அவர் அலெக்சாண்டருக்குக் கீழ்ப்படிந்து நடக்க விரும்பவில்லை. போரஸ் தைரியத்தோடு அலெக்சாண்டரிடம் சண்டைக்கு வந்தார். அலெக்சாண்டர் ஜீலம் நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார். வெயில் அதிகமாக இருந்தது. கிரேக்க வீரர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள்; எனினும், சூரிய வெப்பத்தைக் கவனிக்கா

மல் சண்டை செய்யத் தயாராக இருந்தார்கள். ஜீலம் நதியில் வெள்ளம் ஏராளமாக ஓடிக்கொண்டு இருந்தது. போரஸ் எதிர்க் கரையில் ஐம்பது ஆயிரம் படையுடன் சண்டைக்குத் தயாராகக் காத்திருந்தார். புத்திசாலி யான அலெக்சாண்டர் சிந்து நதியைப் பல நாட்களுக் குப் பிறகே தாண்டுவதாகப் பாசாங்கு செய்தார். அலெக் ஸாண்டர், அங்கே புதிதாய்ச் செய்த கப்பல்களை எல்லாம் மிதக்க விட்டார்; திடீரெனப் போரஸனுக்குத் தெரியா மலே ஆற்றை நொடிப் பொழுதில் கடந்தார்.

உடனே சண்டை ஆரம்பித்தது. போரஸ் இருநூறு பெரிய யானைப் படையை வைத்திருந்தார்; முப்பது ஆயிரம் காலாட்படையும் போரஸனுக்குச் சொந்தமாக இருந்தது. அவர், நாலாயிரம் குதிரைப் படையையும் முன் னூறு இரதங்களையும் வைத்திருந்தார். வில் வித்தையில் தேர்ச்சி அடைந்த வீரர்களும் இருந்தார்கள்.

அலெக்சாண்டர் யானைப் படையைத் தாக்கவில்லை; முதலில் தம் குதிரைப் படையை அனுப்பினர். குதிரை வீரர்கள் ஆயிரக் கணக்கான அம்புகளை எய்தார்கள். இந்திய காலாட்படையில் இருந்தவர்கள் பயந்து, யானை களின் பின் பதுங்கினர்கள். பிறகு கிரேக்கக் குதிரை வீரர்கள் யானைகளின் மீது அம்புகளை எய்தார்கள். இந்திய குதிரை வீரர்கள் வெகு தைரியத்துடன் அலெக் சாண்டரைத் தாக்கினர்கள். ஆனல் அது பயன் படவில்லை. உடனே அலெக்சாண்டர் கடைசியாக எதிரியைத் தாக்கக் கட்டளை இட்டார். யானைகள் பயந்து

ஓடின. போரஸ் மட்டும் தைரியமாகச் சண்டையிட்டார். ஆறரை அடி உயரமுள்ள அந்தக் கம்பீரமான வீரர் சலிக்கவில்லை ; ஒன்பது இடத்தில் காயம் பட்டும் தைரியமாகச் சண்டை யிட்டார் ; முடிவில் கைது செய்யப் பட்டார். அலெக்சாண்டர் வெகு தயாள குண



5 அலெக்சாண்டரும் போரஸும்

முடையவர். அவர் போரஸின் வீரத் தன்மையை மெச்சினர் ; அவருக்குத் தக்கபடி மரியாதை செய்தார். அவர் இராஜ்யத்தைத் திரும்பவும் கொடுத்து விட்டார்.

பிறகு அலெக்ஸாண்டர், வடமேற்கு இந்தியாவையும் ஜெயித்தார். ஆனால் அவர் சேனை, மேலும் சண்டையிட விரும்பவில்லை. அது மிக்க களைப்புடன் இருந்தது. அதனால் அலெக்சாண்டர் தம் தேசம் நோக்கித் திரும்பினர்; போகும் வழியில் பாபிலோன் என்ற இடத்தில் இறந்தார்.

அலெக்சாண்டர் உலகத்தை ஜெயிக்க எண்ணிய வீரர். அவர் எதிரிகளிடத்திலும் அன்பு பாராட்டினர்; தோல்வி அடைந்த போரஸை வெகு தயாள குணத்துடன் பாராட்டினர். அவருடைய வீரச் செயல்களினால் அவருக்கு **மஹா அலெக்சாண்டர்** என்னும் பெயர் கிடைத்தது.

## கேள்விகள்

1. ஜீலம் நதிக்கரையில் ஆண்டுவந்த இந்திய அரசர் யார்? அவர் குணாதிசயங்களை எழுதுக.

2. அலெக்சாண்டர் ஜீலம் நதிக் கரையில் வந்த உடன் எவ்விதம் கஷ்டப்பட்டார்?

3. ஜீலம் நதிக் கரையில் நடந்த சண்டையைப் பற்றி எழுது.

4. அலெக்சாண்டரின் தயாள குணமும் போரஸின் வீரத் தன்மையும் நமக்கு எப்படித் தெரியவருகின்றன?

## 5. அசோகர்

அலெக்சாண்டர் இந்தியாவிற்கு வந்த போது மகத இராஜ்யம் மிகவும் பல முள்ளதாக இருந்தது. அதை ஆண்ட அரசர்களின் வம்சம் **மௌரிய வம்சம்** என்பது.



6. சந்திர குப்தர்

அந்த வம்சத்தின் முதல் அரசர் **சந்திர குப்த மௌரியர்**. அவர் மகன் பிந்துசாரர். பிந்துசாரரின் மகன் அசோகர். இவர் கி.பி. 273-ல் பட்டத்திற்கு வந்தார். 40 வருஷ காலம் பெரிய இந்திய சக்ரவர்த்தியாக ஆண்டுவந்தார். அவர் சிறு வயதில் சண்டை போடுவதில் விருப்பம் உள்ளவராக இருந்தார்; தாம் அரசராக வருவதற்கு முன்பு தக்ஷசீலத்திலும், உஜ்ஜெயினியிலும் இராஜப் பிரதிநிதியாக இருந்தார்; இராஜ தந்திரங்களை அந்தச் சமயத்தில் நன்கு அறிந்தார்.

இவர் அரசரானவுடன் 'தேவநாம் ப்ரியா' என்னும் பட்டப் பெயரை வைத்துக்கொண்டார். 'தேவநாம் ப்ரியா' என்பதற்கு, 'தேவர்களுக்கு விருப்பம் உள்ளவன்' என்பது அர்த்தம். சிலர், இவர் சிறு வய



7. கலிங்க யுத்தம்

தில் இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லுகிறார்கள். இவர் மாமிச போஜனம் செய்ததுண்டு; விருந்து, சாராயம், பாட்டு இவைகளில் காலம் கழித்திருந்ததாகச் சிலர் சொல்லுகிறார்கள்; வேட்டை ஆடுவதில் விருப்பம்

உள்ளவராம். இவர் பட்டத்திற்கு வந்த 13-ஆம் வருஷம் கலிங்க நாட்டின் மீது படை எடுத்தார்.

அப்போது நடந்த சண்டையில் பல போர் வீரர்கள் மாண்டார்கள். 150 ஆயிரம் கலிங்க நாட்டு மக்கள் கைது செய்யப்பட்டார்கள். ஒரு லக்ஷம் ஜனங்கள் இறந்தனராம். போர்க்களம் எங்கும் இரத்தம் நிறைந்து இருந்தது. அதைப் பார்த்தவுடன் அசோகருக்கு மனவருத்தம் ஏற்பட்டது; "இனிமேல் எங்கும் சண்டைக்குப் போகவே மாட்டேன்" என்று சத்தியம் செய்தார்; புத்த மதத்தைப் பரவச் செய்வதுதான் தம் கடமை என்று எண்ணினர்; உயிர்களை வருத்துதல் பாவம் என்று நினைத்தார்.



8. கல்தூண்

இவர், மலைப் பாறையில் புத்தமதக் கொள்கைகளை வெட்டுவித்தார்; கல் தூண்கள் நாட்டினர்; அவற்றின் மீது புத்த மதக் கொள்கைகளை வெட்டுவித்தார்; புத்த தர்மத்திற்குப் பாடு பட்டார். அதனல் அவர் 'தர்ம அசோகர்' என்று பெயர் பெற்றார். "எல்லா உயிர்களிடத்திலும் அன்பு பாராட்ட வேண்டும். உயிர்களைத் துன்பம் செய்யக் கூடாது. இளைஞர்க்குப் பெரியோரிடத்திலும் தாய் தந்தையரிடத்திலும் மரியாதையும் பக்தியும் இருக்க வேண்டும்" என்று

போதித்தார். அவர், புத்த சந்நியாசிகளின் சங்கத்தில் சேர்ந்தார்.

இவர், புத்தர் இருந்த இடங்களை எல்லாம் பார்க்க யாத்திரை செய்தார்; புத்த கயா, சாரநாத், காசி, குசிந‌கரம், சாஞ்சி முதலிய இடங்களையும் பார்த்தார்; அங்கே



9. அசோகர் சாஞ்சியில் கட்டிய ஸ்தூபி

ஸ்தூபங்களைக் கட்டினார்; பல கல் தூண்களையும் நாட்டினார்; நாகரீகம் அற்ற ஜனங்களுக்கு நற்புத்தி போதித்தார்; அவர்களைப் புத்த மதத்தைத் தழுவச் செய்தார்; சோழ பாண்டிய அரசர்களுக்குத் தூதர்களை அனுப்பினார்; மேற்கு ஆசியா, கிரீஸ், எகிப்து, முதலிய தேசங்களுக்குத் தம் தூதர்களை அனுப்பினார். இவர் புகழ் உலகம் முழுவதும் பரவிற்று.




10. அசோகரது சாம்ராஜ்யம்

பிறகு இவர் சயாம், இலங்கை, ஜப்பான், சீனு முதலிய தேசங்களுக்கு மத சந்நியாசிகளை அனுப்பினுர்; அங்கும் புத்த மதத்தைப் பரவச் செய்தார். இலங்கையர் இன்றும் அசோகரைக் கொண்டாடுகிருர்கள். இவர் தம்



11. அநுராதாபுரத்தில் மஹேந்திரர் நாட்டிய அரச மரம்

அருமை மகன் மஹேந்திரரை இலங்கைக்கு அனுப்பினுர். அவர் இலங்கை முழுவதிலும் புத்த மதத்தைப் பரவச்செய்தார். புத்த கயையில் பெரிய அரச மரம் இருக்கிறது. அசோகர் அதன் கிளை ஒன்றை வெட்டினுர்; அதை இலங்கைக்குக் கொடுத்தனுப்பினுர். மஹேந்திரர் அதை இலங்கையில் அநுராதாபுரம் என்ற தலை

நகரில் நாட்டினர். அது இப்போது பெரிய வெள்ளை நிறமான அரச மரமாக இருக்கின்றது. அங்கே ஒரு பெரிய புத்தர் கோவிலும் இருக்கிறது.

இவர் செய்த நன்மைகளில் முக்கியமானது, ஜீவ இம்சை செய்யக் கூடாது எனப் போதித்தது தான்; "ஜந்துக்களைக் கொலை செய்யக் கூடாது; குதிரைகளுக்கும் மாடுகளுக்கும் சூடு போடக் கூடாது; மீன் பிடித்துச் சாப்பிடக்கூடாது; கோழி முதலிய ஜந்துக்களையும் கொல்லக்கூடாது" என்றார். இவர், மிருகங்களை மரம் அடர்ந்த இடங்களில் வளர்த்து வந்தார்.

இந்தப் புகழ் பெற்ற புத்த சக்ரவர்த்தி கி. மு. 232-ஆம் வருஷம் இறந்தார்.

## கேள்விகள்

1. சிறு வயதில் அசோகர் எப்படி இருந்தார்?
2. கலிங்க நாட்டுப் போர் அசோகர் குணத்தை மாற்றியது ஏன்?
3. அசோகர் புத்த மதத்தை எப்படிப் பரவச் செய்தார்?
4. இலங்கையில் மகேந்திரர் செய்தது என்ன?
5. அசோகர் போதித்த கொள்கைகள் எவை?




12. கி. பி.—கி. மு. காட்டும் படம்

## 6. கி.பி.—கி.மு. என்னும் இரண்டின் அர்த்தம்

பாலஸ்தீனம் என்னும் நாட்டில் ஜெருசலேம் என்னும் நகரம் உண்டு. அந்த நகரத்திலும் அதன் பக்கத்து நாட்டிலும் 'யூதர்கள்' என்ற வகுப்பார் இருந்தார்கள். அந்த நாட்டில் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் ஏசு கிறிஸ்து என்ற குருநாதர் பிறந்தார்.

அவருடைய தாய் மேரி; தந்தை ஜோஸப். அவர் பிறந்த போது ஆகாயத்தில் ஒளியுள்ள நக்ஷத்திரங்கள் தோன்றின. அவைகளைக் கண்ட சிலர், 'இவர் யூதர்களுக்கு அரசராவர்' என்றனர். இயேசு ஏழைகளுக்கு உதவி செய்தார். அவர் செய்த அதிசயங்களும் உதவிகளும் பல. அவர் உலகத்தாருக்குப் பாடுபட்டு மரணம் அடைந்தார்.



13. ஏசுநாதர்

இயேசுநாதர் கடவுளின் அம்சம். அவர் ஜனங்களின் பாபத்தைத் தீர்க்க உலகத்திற்குவந்தார். அவர் ஸ்தாபித்த மதம் கிறிஸ்தவ மதம் எனப்படும்.

கிறிஸ்தவர்கள், இயேசு பிறந்த வருஷத்தை முதலாகக் கொண்டு வருஷத்தைக் கணக்கிடுகிறார்கள். இதைக் கிறிஸ்து சகாப்தம் என்றும் சொல்லலாம்.

கி.மு. என்றால் கிறிஸ்து பிறந்ததற்கு முன்காலம்'

என்பது பொருள். கி. பி. என்பது 'அவர் பிறந்ததற்குப் பிறகு ஏற்பட்ட காலம்' ஆகும். நூறு வருஷத்திற்கு 'நூற்றாண்டு' என்பது பெயர்.

இந்தியா தேசத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னும் ஜனங்கள் உயர்ந்த நாகரிகம் உள்ளவர்களாக இருந்தார்கள். ஏசு நாதர் பிறப்பதற்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன்னரே இந்திய அரசர்கள் செம்மையாக அரசு செலுத்தி வந்தார்கள்.

கி.பி.யில் முதல் நூற்றாண்டு, கிறிஸ்து பிறந்த வருஷம் முதல் நூறு வருஷம் வரையில் உள்ள காலம். 10-ஆம் நூற்றாண்டு என்பது 901 வருஷம் முதல் 1000 வருஷம் முடியவுள்ள நூறு வருஷங்களுக்குப் பெயர்.

கி.மு.வில் முதல் நூற்றாண்டைக் கிறிஸ்து பிறந்த வருஷ முதல் பின்னால் எண்ணவேண்டும். கி.மு. வருஷங்களில் வர வர வருஷங்கள் கிறிஸ்து பிறந்த வருஷத்தை நோக்கிக் குறைந்துகொண்டே வரும்.

புத்தர், கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தமது புத்த மதத்தைப் பரவச் செய்தார். நான்காம் நூற்றாண்டில் அலெக்சாண்டர் இந்தியாமீது படையெடுத்து வந்தார். மூன்றாம் நூற்றாண்டில் அசோகர் சக்ரவர்த்தியாக இருந்து இந்தியாவை ஆண்டு வந்தார். புஷ்யமித்திரரும், மினண்டரும் இரண்டாம் நூற்றாண்டில் இருந்தவர்கள். முதலாம் நூற்றாண்டில் 'கன்வ ராஜாக்கள்' இந்தியாவை ஆண்டு வந்தார்கள்.

கிறிஸ்து பிறந்ததற்குப் பிறகு முதலாம் நூற்றாண்டில் 'குரு தாமஸ்' இந்தியாவிற்கு வந்தார். இரண்டாம் நூற்றாண்டில் கனிஷ்க ராஜா வட இந்தியாவில் ஆண்டு வந்தார். மூன்றாம் நூற்றாண்டில் பல்லவ ராஜ்யம் ஆரம்பித்தது. நான்காம் நூற்றாண்டில் சமுத்திர குப்தர் ஆண்டுவந்தார். இப்படியே ஒவ்வொரு நூற்றாண்டிலும் பெரிய அரசர்கள் ஆண்டு வந்தனர். 17-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் இந்தியாவிற்கு முதல் முதலில் வந்தார்கள். இப்போது நடக்கும் நூற்றாண்டு 20-ஆம் நூற்றாண்டு. கிறிஸ்து பிறந்து 1939 வருஷங்கள் ஆகிவிட்டன. இந்த இருபதாம் நூற்றாண்டு கி. பி. 2000-த்தோடு முடியும்.

## கேள்விகள்

1. ஏசு நாதரின் வாழ்க்கையைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

2. பத்தாம் நூற்றாண்டின் ஆரம்ப வருஷம் எது? முடிவு வருஷம் எது?

3. சமுத்திர குப்தர் இந்தியாவில் எந்த நூற்றாண்டில் ஆண்டு வந்தார்?

4. இப்பொழுது நடந்து வரும் நூற்றாண்டு எது?

## 7. குப்த மன்னர்களின் கீர்த்தி

கி. பி. நான்காம் நூற்றாண்டில் குப்த ராஜ்யம் சிறந்து விளங்கிற்று. அதன் புகழ் பெற்ற முதல் அரசர் சந்திர குப்தர். இவர் புகழ்பெற்ற வீரர்; பல நாடுகளைக் கைப்பற்றினர்; குமார தேவி என்ற ஒரு லிச்சவி வமிசத்து இராஜ குமாரியை மணந்து கொண்டார்; கி. பி. 320-ல் சந்திரகுப்தர் சக்கரவர்த்தி ஆனர்.

சமுத்திர குப்தர் என்னும் அடுத்த சக்ரவர்த்தி சந்திர குப்தருடைய மகனவார். அவர், ஆரிய பூமியில், தாம் பெரிய சக்ரவர்த்தி ஆக வேண்டும் என்று ஆவல் கொண்டார். அவர் பெரும் படையுடன் தமது பலத்தை வெளிக்காட்டப் பல இராஜ்யங்களின் வழியாகச் சென்ருர்; வட இந்தியாவில் எல்லா இராஜ்யங்களையும் ஜெயித்தார்; பிறகு தெற்கு நோக்கிச் சென்ருர்; பல அரசர்களையும் ஜெயித்தார். வங்காளம், அஸ்ஸாம், நேபாளம், பாரசீகம், இலங்கைத் தீவு என்ற தேசங்களின் அரசர்கள் இவர் ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள்; புத்த மதஸ்தர்கள் அவரிடம் ஆணை பெற்றுப் புத்த கயையில் ஒரு பெரிய புத்தர் கோவிலும் மடமும் கட்டினர்கள்; அந்த மஹாராஜர் ஒரு அஸ்வமேத யாகத்தைச் செய்தார். அதற்கு எல்லா அரசர்களும் வந்திருந்து அவரைப் புகழ்ந்தார்கள். அவர் சங்கீதத்தில் பிரியம் உள்ளவர். அவர் கி. பி. 330 முதல் 375 வரையில் அரசு செலுத்தினர்.

இவருக்குப் பிறகு புகழ் பெற்ற குப்த அரசர் இரண்டாம் சந்திர குப்தர். இவருக்கு விக்கிரமாதித்யர்

14. சமுத்ரகுப்தர் வீணை வாசித்தல்

என்றும் பெயர் உண்டு. இவர், மேற்கே அரபிக்கடல் வரையிலிருக்கும் மாளவம், கூர்ஜ்ஜரம், கத்தியவார் முதலிய இராஜ்யங்களைக் கைப்பற்றினர். இவர் காலத்

தில் மேற்கில் இருக்கும் துறைமுகத்திலிருந்து எகிப்து,




15. விக்ரமாதித்யரது இராஜ்யம்

கிரீஸ், உரோமாபுரி முதலிய மேனாடுகளுடன் வியாபாரம் ஆரம்பித்தது.

விக்கிரமாதித்தர் மிக்க தைரியமும் புத்தி சாதுரியமும் உடையவர்; தயாள குணமும் ஊக்கமும் பொருந்தியவர். **பாஹியான்** என்பவர் சீனர். அவர் பௌத்த மதத் துறவி. அவர் சீன தேசத்திலிருந்து இவருடைய சபைக்குத் தூதராக வந்தார். அவர், அக்காலத்திய இராஜ்ய நிலைமையை நன்ருக ஆராய்ந்து எழுதியிருக்கிருர்.

குப்த மன்னரின் புகழ் பெற்ற காலம் 'குப்த பொன் காலம்' என்று சொல்லப்படும். அக்காலத்தில் குப்தர் ஆட்சி நன்ருக இருந்தது. பாடலிபுத்திரம், அயோத்தி, உஜ்ஜெயினி என்னும் பெரிய நகரங்களில் பெரிய கலா சாலைகள் இருந்தன. சம்ஸ்கிருத பாஷை உந்நத நிலைமையில் இருந்தது. ஜனங்கள் இளைப்பாற நீர் நிலையும், சத்திரங்களும், சோலைகளும் பல ஏற்பட்டு இருந்தன. **சாகுந்தலம்** என்ற நூல் எழுதிய **காளிதாஸரும்** மற்ற எட்டுப் புலவர்களும் இருந்தார்கள்.

### கேள்விகள்

1. சமுத்திரகுப்தர் ஜெயித்த ராஜ்யங்கள் எவை?

2. குப்த மன்னர்களின் காலத்தை ஏன் 'பொன் காலம்' என்று சொல்லுகிருர்கள்?

3. விக்கிரமாதித்யர் ஜெயித்த ராஜ்யங்கள் எவை?

## 8. ஹர்ஷ வர்த்தனர்

குப்தர் ஆட்சிக்குப் பிறகு ஏறக்குறைய 300 வருஷ காலம் வெளிநாட்டு 'ஹூணர்' முதலியோர் இந்தியா மீது படையெடுத்தனர். அதனுல் நம் தேசம் மிகவும் கஷ்டப்பட்டது. ஏழாம் நூற்றுண்டில் ஒரு பெரிய சக்ரவர்த்தி வட இந்தியாவில் தோன்றினுர். அவர் பெயர் ஹர்ஷர்.

வட இந்தியாவில் தானேஸ்வரம் என்னும் நகரம் இருக்கிறது. அதற்கு அருகில் 'குருக்ஷேத்திரம்' என்னும் இடத்தில் பாரத யுத்தம் நடந்தது. இந்த இடத்தில் ஏழாம் நூற்றுண்டில் பிரபாகர வர்த்தனர் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவருடைய மூத்த பிள்ளை இராஜ்ய வர்த்தனர்; இளையவர் ஹர்ஷ வர்த்தனர். இவ்விருவர்க்கும் இளையவள் இராஜ்யஸ்ரீ. கிருஹவர்மன் என்பவன் கன்னேசி நாட்டு அரசன். அவன் இராஜ்யஸ்ரீயை மணந்தான். இராஜ்ய வர்த்தனர் ஹூணரைத் தோற்கடித்தார். பிரபாகர வர்த்தனர் இறந்தார். அப்பொழுது கிருஹவர்மன் மாளவதேசத்து அரசனுல் கொல்லப்பட்டான். இராஜ்யவர்த்தனர் சசாங்கன் என்ற வங்க தேசத்தரசனுல் கொல்லப்பட்டார். அதன் பிறகு ஹர்ஷர் அரசர் ஆனுர்.

ஹர்ஷர் உடனே பெரிய சேனையைத் திரட்டினுர்; தம் தங்கை இராஜ்யஸ்ரீ இருந்த இடம் நோக்கிச் சென்ருர். அந்த உத்தம மனைவி தன் கணவன் இறந்த துக்கத்தினுல் விந்திய மலைக்குப் போய் உயிரை விடத்


ஹர்ஷ இராச்சியம்
காஷ்மீரம்
பாடலிபுத்திரம்
நாலந்தா
காமரூபம்
ஹர்ஷ இராச்சியம்
உஜ்ஜயினி
எல்லோரா
மேலைச் சாளுக்கியர்
கலிங்கம்
வாதாபி
வங்காள
குடாக்கடல்
காஞ்சீபுரம்
மாமல்லபுரம்
காவேரி
இலங்கை
இந்து
மஹா
சமுத்திரம்
76
84
92

16. ஹர்ஷ இராஜ்யம்

தயாராக இருந்தாள். அச் சமயத்தில் ஹர்ஷர் அவளைக் கண்டு தடுத்தார். பிறகு அவர், தானேசுவரம், கன்னேசி என்ற இரண்டு நாட்டிற்கும் சக்கிரவர்த்தி ஆனர். சமுத்திரகுப்தரைப் போல ஹர்ஷரும் ஒரு பெரிய சேனையுடன் திக் விஜயம் செய்தார். அவர் காலத்தில் ஹியூன்ஸங் என்ற ஒரு புத்த குரு இந்தியாவிற்கு வந்தார்; அவர் ஹர்ஷரால் மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்; வட இந்தியாவில் உள்ள எல்லாச் சிற்றரசர்களும் ஹர்ஷருக்குக் கீழ்ப்படிந்து கப்பம் கட்டி வந்தார்கள். அஸ்ஸாம் தேசத்து மன்னனும் ஹர்ஷருக்குக் கப்பங் கட்டுவதாக ஒப்புக்கொண்டான். ஆனல் ஹர்ஷர் நர்மதை நதிக் கரையைத் தாண்டி, மேலைச் சாளுக்கிய அரசன்ன புலிகேசியை ஜெயிக்க முடியவில்லை.

ஹியூன்ஸங் என்ற சீன யாத்ரிகர் ஹர்ஷரது அரசாட்சியைப் பற்றிச் சிறப்பாக எழுதியிருக்கிறர். ஜனங்கள் ஹர்ஷ ராஜ்ஜியத்தில் வெகு சுகமாக இருந்தார்கள். குடிகள் ஆறில் ஒரு பாகம் மட்டும் இராஜாவுக்கு வரி கட்டினர்கள். எல்லா மதஸ்தர்களும் சுகமாக இருந்தார்கள். அரசர் எல்லா மதஸ்தரிடத்திலும் அன்பு காட்டி நடந்தார். எங்கும் ஜனங்கள் நியாயத்துக்குக் கட்டுப்பட்டு நடந்து வந்தார்கள். ஜனங்கள் பெரிய குற்றம் யாதும் செய்யவில்லை. கல்வியோ மிகவும் பரவி யிருந்தது. அரசரும் பெரிய கல்விமான்; ரத்னவளி, நாகாநந்தம் முதலிய நூல்களை இயற்றினர். ஹர்ஷர் அசோகரைப் போலவே புத்த மதத்தைச் சேர்ந்தவர். இவர் தர்மசாலைகளையும், புத்த மடங்களை



17. ஹர்ஷர் தருமம் செய்தல்

யும் கட்டினர். இவர் தருமம் செய்வதில் புகழ் பெற்றவர். இவரும் புகழ் பெற்ற புத்த சக்ரவர்த்தி ஆவர்.

## கேள்விகள்

1. ஹர்ஷவர்த்தனரை ஏன் அசோகருடன் ஒப்பிடுகிறார்கள்?

2. ஹியுன்ஸங் யார்? அவர் இந்தியாவின் நிலைமையைப் பற்றி என்ன எழுதியிருக்கிறார்?

3. இராஜ்யஸ்ரீ யார்? அவளை ஏன் உத்தம மனைவி என்று சொல்லவேண்டும்?

## 9. மகம்மது நபி

பல சமயத்தவர் நம் நாட்டில் வாழ்கின்றனர். அவர்களுள் முகம்மதியர் முக்கியமானவர்கள். அவர்கள் 'முஸ்லீம்கள்' என்றும், 'முசல்மான்கள்' என்றும் சொல்லப் படுவார்கள். அவர்கள் மதத்திற்கு 'இஸ்லாம்' என்பது பெயர். குரான் என்பது அவர்களின் வேதம்.

இஸ்லாம் மதம் மகம்மது நபியால் ஏற்படுத்தப்பட்டது. அவர் மெக்காவில் கி. பி. 570-ஆம் வருஷத்தில் பிறந்தார். அவர் தந்தையார் அப்துல்லா என்பவர். அவர் மெடிஞவில் முதலில் தமது மதத்தை ஸ்தாபித்தார். மெக்கா, மெடிஞ என்னும் இரண்டு க்ஷேத்திரங்களும் அரேபியா தேசத்தில் இருக்கின்றன. அரேபியா தேசத்து மக்கள் அராபியர்கள் என்று வழங்கப்படுவர். அவர்கள், குதிரைகளையும் ஒட்டகங்களையும் செல்வமாகக் கருதுகிருர்கள். அவர்கள் முதல் முதலில் மகம்மது நபியின் பிரசாரத்தைக் கேட்டு முஸ்லீம்கள் ஆஞர்கள். இந்த மதம் நாளடைவில் அரேபியா, துருக்கிஸ்தானம், மத்ய ஆசியா, ஆப்கனிஸ்தானம், ஆப்பிரிக்கா, இந்தியா முதலிய தேசங்களில் பரவிற்று.

மகம்மது நபி என்பவர், இளமையிலேயே நற்குணங்கள் பொருந்தியவராக இருந்தார். அவர் பிறக்கு முன்

தந்தை இறந்துவிட்டார். அவர் பிறந்த சில மாதங்களுக்குப் பின் தாயார் அமீனு பீபியும் இறந்தார். மகம்மது, சிறு வியாபாரங்கள் செய்து சமர்த்தரானர். அவர் இருபத்தைந்தாம் வயதில் 'கடிஜா' என்னும் செல்வம் பெற்ற அம்மையாரை மணந்தார்.

திருமணத்திற்குப் பிறகு அவர் அடிக்கடி தனியாகத் தியானத்தில் இருப்பது வழக்கம்; கடவுளைப் பற்றிச் சிந்திப்பது உண்டு. ஒரு நாள் அவருக்குச் சில சீர்திருத்த எண்ணங்கள் தோன்றின. அவர் அச் சீர்திருத்தங்களைப் பிரசங்கம் செய்தார். அவருடைய கருத்துகளாவன: "கடவுள் ஒருவரே. விக்கிரகங்களையும் பல தெய்வங்களையும் வணங்குதல் கூடாது. கடவுளின் முன் எல்லா மக்களும் சமமானவர்."

மெக்காவில் முரட்டுத்தனம் உள்ள அராபியர்கள் நபிகளின் கொள்கைகளை வெறுத்தார்கள்; அவருக்குத் தீங்கு செய்ய எண்ணினர்கள். இதை அறிந்த நபிகள் நாயகம் கி. பி. 622-ல் மெக்காவை விட்டு மெடினு என்னும் நகரத்திற்குச் சென்றார். இச்சம்பவம் ஹெஜிரா என்று வழங்கப்படுகிறது. இது முதல் தான் மகம்மதிய வருஷங்கள் கணக்கிடப்படுகின்றன.

மகம்மது நபி மெடினுவுக்குத் தலைவரானர்; பிறகு ஒரு பெரிய சேனையுடன் மெக்காவையும் அரேபியா முழுவதையும் தம் வசம் ஆக்கிக்கொண்டார்; தமது மதத்தைப் பரவச் செய்தார்; கி.பி. 632-ல் நபிகள் நாயகம் இறைவன் திருவடியை அடைந்தார்.

அவரைப் பின் பற்றினோர் உலகம் முழுவதும் முகம்மதிய மதத்தைப் பரவச் செய்தார்கள்.

### கேள்விகள்

1. மகம்மதிய மதத்தின் சிறந்த கொள்கைகள் எவை ?
2. 'ஹெஜிரா' என்பது யாது ?

## 10. பல்லவர்கள்—மஹாபலிபுரம்

காஞ்சிபுரம் சென்னப் பட்டணத்திற்குச் சமீபத்தில் உள்ள ஒரு பழைய நகரம். இந்தியாவில் சிறப்புற்ற ஏழு நகரங்களில் இது ஒன்று. இந்த நகரம், செங்கற்பட்டு என்னும் பட்டணத்திற்குச் சுமார் இருபத்தைந்து மைல் தூரத்தில் இருக்கிறது. பல்லவ அரசர்கள் காஞ்சிபுரத்தைத் தலை நகரம் ஆக்கினர்; அங்கே பெரிய கட்டிடங்களையும் பெரிய கோயில்களையும் கட்டினார்கள்.

பல்லவ ராஜ்யம் வட பெண்ணை ஆறு முதல் காவேரி வரையில் பரவி இருந்தது. பல்லவ அரசருள் புகழ் பெற்றவர் **மகேந்திர வர்மர்** என்பவர். அவர் சைவ மதத்தினர்; காஞ்சிபுரத்தில் பெரிய கோவில்களைக் கட்டினர்; திருக்குளங்களையும், ஏரிகளையும் வெட்டினார்.

மகேந்திர வர்மர் மகன் **நரசிம்ம வர்மன்**. நீங்கள், இந்த மஹா ராஜரைப் பற்றி மூன்றும் வகுப்புப் புத்தகத்தில் முன்னரே படித்திருக்கிறீர்கள். இவர் காஞ்சி

18. மஹாபலிபுரம்—பழைய விளக்குக் கூண்டு

புரத்திற்குக் கிழக்கில் கடற்கரை ஓரத்தில் மஹா மல்ல புரம் அல்லது **மஹாபலி புரம்** என்னும் அழகிய துறை முகப் பட்டினத்தை ஸ்தாபித்தார்.

இந்த இடத்தில் பல்லவ அரசர்கள் மலைகளிலும், குன்றுகளிலும், பாறைகளிலும் பல கோவில்களைக் குடைவித்துள்ளனர். அவற்றில் பாண்டவர் ரதங்கள் என்று கூறப்படும் கோவில்கள் பெயர் பெற்றவை. அர்ச்சுனன் தவம் செய்வதும், கங்கை வருவதும், சிவபெருமான் காட்சி கொடுப்பதும் வெகு அழகாகப் பாறையில் செதுக்கப்பட்டுள்ளன. அங்குக் கண்ணனது வெண்ணெய் உருண்டையையும் காணலாம். அது ஒரு பெரிய உருண்டையான மலைப் பாறை. கடற்கரையில் அழகான ஒரு கோவில் இருக்கிறது. ஒரு புறம் மஹாபலிச் சக்கரவர்த்தி உருவம் இருக்கிறது. இந்தக் கற்சிலையை மஹா விஷ்ணு என்றும்



19. கடற்கரையில் உள்ள கோவில்




20. மஹாபலிபுரத்தில் உள்ள இப்போதைய விளக்குக் கூண்டு

சொல்லுகிறார்கள். இன்னொரு பக்கத்தில் சிவபெருமான் சந்நிதி இருக்கிறது. நிலாக் காலத்தில் இந்த ஆலயத்தையும் கடற் கரையையும் பார்க்க வெளி நாட்டாரும் இங்கு வருகிறார்கள். மலைப் பாறையின் மீது ஒரு பெரிய விளக்குக் கூண்டு இருக்கிறது. மஹாபலி ஆலயம், மற்றக் கல் ரதங்கள், கட்டடங்கள் அடங்கிய இந்த அழகிய மஹாபலிபுரம், பல்லவ ராஜாக்கள் சிறப்பை வெளிக் காட்டுகிறது. பிள்ளைகளே! நீங்கள் இத்தலத்திற்குப் போய்ப் பார்ப்பது அவசியம்.

பல்லவ ராஜாக்கள் இந்துமதச் சிறப்பை வெளிக் காட்டினார்கள். அவர்களால் சம்ஸ்கிருத பாஷையும் முன்னேற்றம் அடைந்தது. காஞ்சி புகழ் பெற்ற நகரமாக விளங்கிற்று. ஹியூன்ஸங் இந்தப் பட்டணத்தைப் பார்த்த போது இந்த நகரின் சிறப்பைப் பாராட்டிப் புகழ்ந்தார். மதாசாரியர் பலரும் இங்குத் தங்கி இருந்தார்கள். குணமுள்ள உத்தியோகஸ்தர்களும், நியாயாதிபதிகளும் இருந்தார்கள். நகர பரிபாலன சபைகளும், கிராமப் பஞ்சாயத்துகளும் பல்லவ ராஜாங்கத்தை மேன்மைப்படுத்தின.

## கேள்விகள்

1. காஞ்சிபுரத்தின் சிறப்பு எதனால் ஏற்பட்டுள்ளது?

2. மஹாபலிபுரத்தில் பார்க்கக் கூடிய அதிசயங்கள் எவை?

3. பல்லவ ராஜாக்களின் சிறப்பு எப்படி நமக்குத் தெரிய வருகிறது? அவர்கள் செய்த நன்மைகள் எவை?

## 11. இராஜ புத்திரர்கள்

ஹர்ஷ சக்கரவர்த்தி இறந்துவிடவே, அவருடைய பெரிய இராஜ்யம் அழியத் தொடங்கியது. அதன் பயனாக, வட இந்தியாவில் பல இராஜபுத்திர ராஜ்யங்கள் தோன்றின. இராஜ புத்திரர்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து இந்தியாவில் புகழுடன் அரசு செலுத்த ஆரம்பித்தனர்.

மத்திய இந்தியாவில் அரவல்லி மலைகளைச் சுற்றி இருக்கும் பிரதேசம் 'இராஜ ஸ்தானம்' என்னும் நாடு. இராஜ புத்திர அரசர்கள் ஆண்ட பூமி அதுவே ஆகும். அந்த இடம் பாலைவனங்களும், மலைப்பிர தேசங்களும், பள்ளத்தாக்குகளும் அடங்கியது. இராஜ்புத்திர ராஜ்யத்திற்குக் கிழக்கில் கங்கை நதியும், மேற்கில் சிந்து நதியும், தெற்குப் பக்கம் நர்மதை நதியும் எல்லைகளாக இருந்தன. இராஜ புத்திரர் சிலர், ஆரம்பத்தில் ஆரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள். வெளித் தேசத்திலிருந்து வந்து சேர்ந்தவர்கள் சிலர். அக்கினி குல க்ஷத்திரியர்கள் சிலர். இவர்கள் எல்லோருடைய கூட்டுறவால் பிறந்த பிற்கால இராஜ புத்திரர்கள் இந்து மதத்தின் சிறப்பை வெளிக் காட்டினார்கள்.

இராஜ புத்திரர்கள் சிவந்த மேனியை உடையவர்கள். அவர்கள் ரூபம், நடை உடை பாவனைகளில் எல்லாம் அழகு வாய்ந்தவர்கள் ; சிறந்த யுத்த வீரர்கள் ; சண்டையில் புறங்காட்டி ஓடமாட்டார்கள் ; சத்தியம் தவறமாட்டார்கள் ; தம் யஜமானரைக் காப்பாற்ற உயி

ரையும் கொடுப்பார்கள். 'அவர்கள் பிரமதேவனது அக்கினி குண்டத்திலிருந்து உதித்தவர்கள்' என்பர். சரித்திர ஆசிரியர்கள் அவர்களின் தீரச் செயல்களை நன்கு வெளியாக்கி யிருக்கிறார்கள். ஆடவர் போர் புரிவதே தங்கள் தொழில் என்று கருதினார்கள். அவர்கள் குலாபிமானமும், மதாபிமானமும் உள்ள சிறந்த வீரர்கள்.

பெண்கள் ஆடவர்களைப்போல வீரம் உடையவர்கள்; சண்டையில் தோற்கடிக்கப்பட்டு உயிருடன் திரும்பிய கணவனை மதிக்கவே மாட்டார்கள். இராஜ புத்திர வீரர்கள் சண்டையில் மடிந்துபோனால், இராஜ புத்திர ஸ்திரீகள் எதிரி வசம் அகப்படமாட்டார்கள். எல்லாரும் சேர்ந்து, பெருந் தீயை மூட்டுவார்கள். அதில் ஒருவர் பின் ஒருவராகப் பாய்ந்து உயிர் துறப்பார்கள். இப்படித் தீக் குளிப்பது ஜௌஹார் என்று சொல்லப் படும். ஸ்வயம்வரம் என்ற வழக்கப்படி இராஜ புத்திர ஸ்திரீகள் தம் கணவரைத் தாமே தேர்ந்தெடுத்தார்கள்.

**21.** இராஜபுத்ரமாது

கன்னோசி, டில்லி, ஆஜ்மீர் முதலிய இராஜ புத்திர ராஜ்யங்கள் சிறந்தவை. அந்த இராஜ்ய அரசர்களுள் கன்னோசியை ஆண்ட போஜ ராஜரும், ஜயச்சந்திரரும்,

டில்லி ஆஜ்மீரை ஆண்ட பிருதிவிராஜரும் மிகவும் கீர்த்தி பெற்றவர்கள். இவ்வளவு சிறந்த வீரர்களான இராஜபுத்திரர்கள் ஒற்றுமை இல்லாமல் இருந்தார்கள்.

### கேள்விகள்

1. 'இராஜ ஸ்தானம்' எப்படிப்பட்ட தேசம்? அதன் எல்லைகள் எவை?

2. இராஜ புத்திரர்களின் குணதிசயங்கள் எவை?

3. இராஜ புத்திர ஸ்திரீகளின் வீரத்தன்மை நமக்கு எப்படித் தெரியவருகிறது?

## 12. இந்தியா மீது மகம்மதியர் படையெடுப்பு

வட இந்தியாவில் இராஜ புத்திர நாடுகள் ஒற்றுமையுடன் இல்லை. அதனல் அந்த நாடுகளை ஒன்றுபடுத்தி ஆண்ட சக்கிரவர்த்தி ஒருவர்கூட இல்லை. தக்ஷிணமும் பல இராஜ்யங்களாகப் பிரிந்து வலுக் குறைந்து இருந்தது. இந்தச் சமயத்தில் மகம்மதியர் படையெழுச்சி ஏற்பட்டது.

மகம்மதியர்கள் வடமேற்குக் கணவாய்கள் வழியாக இந்தியாமீது படை எடுத்தார்கள். முதல் முதலில் இந்தியாவைத் தாக்கிய வீரர் **மகம்மது பின் காஸிம்.** இவர் மகம்மதிய காலிப் என்ற பாரசீகச் சக்ரவர்த்தியால் அனுப்பப்பட்டார்; சிந்து மாகாணம் முழுவதையும் கைப்பற்றினர். மகம்மதியர்கள் அது முதல் இந்தியாவின் உயர்ந்த நிலைமையை நேரில் பார்த்தார்கள்.

அதற்குப் பிறகு ஆப்கானிஸ்தானத்தில் சிறப்பு வாய்ந்த இராஜ்யம் கஜினி இராஜ்யம் ஆகும். அதை **சபக்டிஜீன்** என்ற துருக்கிய மன்னர் ஆண்டு வந்தார். அவர் கைபர் கணவாய் வழியாக இந்தியாவில் பிரவேசித்தார். அப்போது பஞ்சாப் தேசத்தை ஆண்ட ஜெயபாலர் சபக்டிஜீனை எதிர்த்தார்; ஆனல் தோல்வி அடைந்தார். ஏராளமான திரவியத்துடன் சபக்டிஜின் கஜினிக்குத் திரும்பினர். அது முதல் மகம்மதிய அரசர் பலர் இந்தியாமீது படை எடுக்கலாயினர்.

22. கஜினி மகம்மது

அவர்களுள் சிறந்தவர் கஜினி மகம்மது. அவர் பொருள் தேடும் நோக்கம் உடையவர். அவர் சிறந்த வீரர்; இஸ்லாம் மதத்தில் மிகுந்த பற்று உடையவர்; முதலில் கி. பி. 1001-ல் இந்தியாமீது படையெடுத்தார். ஜெயபாலர் மீண்டும் எதிரிகளைத் தாக்கினர். ஆனல் தோற்றுவிட்டார். கஜினி மகம்மது மீண்டும் படை யெடுத்து ஜெயபாலர் குமாரரைத் தோற்கடித்தார்; இவ்விதமாகத் தானேஸ்வரம், கன்னேசி, வட மதுரை, நாகர் கோட்டை என்ற சிறந்த நகரங்களைத் தாக்கினர்; கடைசியில் குஜராத்தில் உள்ள சோமநாதர் ஆலயத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொண்டார். அங்கு இருந்த ஏராளமான செல்வம்

மகம்மதுக்குக் கிடைத்தது. ஆயினும் அவர் இந்தியாவில் தங்கவில்லே.

கஜினி மகம்மதுக்குப் பிறகு படையெடுத்தவர் கோரி மகம்மது. அவருக்கு இந்தியாவில் இராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்ற நோக்கம் உண்டு. அவர், 1191-ல் தானேஸ்வரத்தில் நடந்த போரில் தோல்வி அடைந்தார்; மீண்டும் 1192-ல் நடந்த சண்டையில் பிருதிவி ராஜரைத் தோற்கடித்தார்; பிறகு ஜயச் சந்திரரையும் தோற்கடித்தார். இராஜ புத்திரர்க்குள் ஒற்றுமை இல்லாததனல், கோரி மகம்மது வட இந்தியா முழுவதும் தம் வசமாக்கிக்கொண்டார்.



23. குதுப்மினர்

அவர் குத்புதீன் என்னும் சேனைத் தலைவரை தம் பிரதி நிதியாக இருந்து இந்தியாவை ஆளச் செய்தார். குத்புதீன் டில்லியில் ஆண்ட முதல் மகமத்தியர் ஆவர். அவர் பல நாடுகளை வென்றார்; டில்லிக்கு அருகில் சுமார் 250 அடி உயரம் உள்ள தூண் ஒன்றைக் கட்டினர். அதற்கு குதுப் மினர்

என்பது பெயர். அதனை இப்போதும் காணலாம். குத்புதீனுக்குப் பிறகு மகம்மதிய அரசர் பலர் வெகு காலம்இந்தியாவை ஆண்டு வந்தார்கள்.

### கேள்விகள்

1. இராஜபுத்திர நாடுகள் எப்படி மகம்மதியர்களால் கைப்பற்றப்பட்டன?

2. ஜெயபாலரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

3. மகம்மது கோரி தோற்கடித்த அரசர்கள் யார்? அவருடைய சேனைத் தலைவர் யார்? அவர் டில்லியில் எதைக் கட்டினார்?

## 13. கிருஷ்ண தேவ ராயர்

விஜய நகரம் என்ற இராஜ்யம் 1343-ல் ஹரிஹரர், புக்கர் என்ற இரண்டு சகோதரர்களால் ஸ்தாபிக்கப் பட்டது. துக்ளக் இராஜ்யத்தின் பலம் குறைந்த வுடன், விஜய நகர இராஜ்யம் சிறப்பு அடைந்தது. இந்த இரு சகோதரர்களும் துங்கபத்திரா நதியின் தென் கரையில் ஹம்பி அல்லது விஜய நகரம் என்னும் பட்டணத்தை ஸ்தாபித்தார்கள்.

அந்நகரம் ஏழு மதில்களாலும் அகன்ற அகழி களாலும் சூழப்பட்டன. அதன் வீதிகள் அகல மாகவும் மாளிகைகள் அழகுடனும் விளங்கின. பல கோபுரங்களும் கோயில்களும் இருந்தன. கோட்டைக்

24. கிருஷ்ண தேவ ராயர்

குள் நந்த வனங்களும் புன்செய் நிலங்களும் மிகுதியாக இருந்தன.

இந்த இராஜ்யத்தின் கீர்த்தி பெற்ற மன்னர் **கிருஷ்ண தேவ ராயர்.** விஜய நகர இராஜ்யம் கிருஷ்ணு நதி முதல் காவேரி நதி வரையில் பரவி இருந்தது. கிருஷ்ண தேவ ராயர், பீஜப்பூர் முதலிய தேசத்து மகம் மதிய மன்னர்களைத் தோற்கடித்துப் பெரிய சக்ர வர்த்தியாக விளங்கினர்; மைசூர், மதுரை, தஞ்சாவூர், முதலிய நாடுகளை வென்ருர்; எல்லாத் தேசங்களிலும் தம் பிரதிநிதிகளை அமர்த்தினர். அவர்கள், இராஜ் யங்களை நன்ருக ஆண்டு வந்தார்கள். மதுரையிலும், தஞ்சாவூரிலும் கிருஷ்ண தேவ ராயருக்குக் கீழ் நாயக்க மன்னர்கள் ஆண்டு வந்தார்கள்.

கிருஷ்ண தேவ ராயர் புகழ்பெற்ற வீரர். அவர் பெரிய கல்விமான். அவர் தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம் ஆகிய பாஷைகளில் அபிமானம் உள்ளவர். அவர் தெலுங்குப் புலவராக விளங்கினர். அவருடைய சபை யில் புகழ் பெற்ற எட்டு ஆந்திர வித்வான்கள் இருந்தார் கள். அவர்களுக்கு **அஷ்டதிக்குக் கஜங்கள்** என்பது பெயர். அவர்களுள் ‘பெத்தண்ணு’ என்னும் புலவர் மிகவும் சிறந்தவர். அரசர், இந்து மதத்தைச் சிறப்புற்று ஓங்கும்படி செய்தார்; அநேக கோவில்களையும், கோபு ரங்களையும், மாளிகைகளையும் கட்டினர்; பல வித்வான் களை ஆதரித்தார்; அவர்களுக்குப் பரிசு கொடுத்தார்.

கிருஷ்ண தேவ ராயர் பெரிய சேனைகளை வைத் திருந்தார்; ஆயிரக் கணக்கான யானைப் படையை

வைத்திருந்தார்; குதிரை வீரர் பலர் இருந்தனர். அரசர், குடிகளின் நன்மைக்காக மிகவும் பாடுபட்டார். அவர் காலத்தில் குடிகள் வெளி நாடுகளுடன் வியாபாரம் நடத்தி வந்தார்கள். மேற்குத் தேசங்களிலிருந்து ஐரோப்பியர்கள் விஜய நகரத்திற்கு வந்தார்கள்; அந்த நகரத்தைப் பார்த்து மகிழ்ந்தார்கள். தென்னிந்தியாவில் காணும் கோவில்களும் கோபுரங்களும், சித்திரங்கள் அடங்கிய மண்டபங்களும் விஜய நகர அரசர்களால் கட்டப்பட்டன.

பெல்லாரி ஜில்லாவில் ஹம்பி என்னும் இடத்தில் இடிந்து பாழாய்க் கிடக்கும் கட்டிடங்களைப் பார்த்து அயல் நாட்டார் இப்பொழுதும் ஆச்சரியப்படுகிறார்கள். 1529-ல் கிருஷ்ண தேவ ராயர் இறந்தார். அவருக்குப் பிறகு விஜய நகர இராஜ்யம் அழிந்து போயிற்று. 1565-ஆம் வருஷத்தில் தலைக்கோட்டை என்னும் இடத்தில் மகம்மதிய சுல்தான்கள் ஒன்று சேர்ந்து விஜய நகர அரசரைத் தோற்கடித்தார்கள். அதன் பிறகு விஜய நகர ராஜ்யம் வீழ்ச்சி அடைந்தது. எனினும், அதன் பெருமையும் புகழும் ஒருபோதும் மறக்கத் தகுந்தவை அல்ல.

### கேள்விகள்

1. 'ஹம்பி' நகரத்தின் சிறப்பு எதனால் ஏற்பட்டது?
2. கிருஷ்ண தேவ ராயரின் குணாதிசயங்கள் எவை?

## 14. அக்பர்

அக்பர் புகழ்பெற்ற மொகலாயச் சக்கரவர்த்தி. அவர் இந்தியாவை 1555 முதல் 1605 வரையிலும் ஆண்டு வந்தார்; ஹிந்துக்களையும் மகம்மதியர்களையும் வித்தியாசம் காட்டாமல் சமமாகப் பாராட்டி வந்தார். அவர் ஆளத் தொடங்கிய போது மொகலாய ராஜ்யம் சிறிதாக இருந்தது. ஆனால், போரில் வங்காளம், சிந்து, காஷ்மீரம், கூர்ச்சரம் முதலிய இராஜ்யங்கள் அவர் வசமாயின. அவர் சித்தூர் முதலிய இடங்களில் இருந்த இராஜபுத்திர அரசர்களையும் வென்றார்; நர்மதை நதியைக் கடந்து காண்டேஷ், ஆமத்நகரம் முதலிய இராஜ்யங்களையும் தாக்கினர். அவருடைய ஏகாதிபத்தியம் சிறப்புடன் இருந்தது.

25. அக்பர்

அக்பர் அழகிய உருவம் உடையவர்; திடகாத்திரம் உடையவர். அவர் மஹா வீரர்; தாம் ஜெயித்த விரோதிகளையும் அன்புடன்நடத்தினர்; இராஜ புத்திர வீரர்களைச் சிநேகம் செய்துகொண்டார். அவர்கள் மொகலாய இராஜ்யத்தில் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்தார்கள். போரில் இராஜபுத்திர சேனதிபதிகள் அக்பர் சக்ரவர்த்திக்கு உதவி புரிந்தார்கள். அக்பர் தயாள குணம் உடையவர். அவர் மிகவும் புத்திசாலி; அநேக நூல்களைப் பிறருடைய உதவியால் நன்கு




26. அக்பர் சாம்ராச்சியம்

அறிந்துகொண்டார்; ஹிந்துக்களை மரியாதையாக நடத்தினர்; எல்லா மதத்தினரிடமும் அன்பு காட்டினர். ஐரோப்பியர் அவர் அரசைக் கவனித்துப் பாராட்டினர்கள்.

இராஜா தோதர்மால், மான்சிங் முதலிய இராஜ புத்திர வீரர்கள் அவருடைய சேனைத் தலைவராகவும், மற்ற உத்தியோகஸ்தர்களாகவும் இருந்து உதவி புரிந்தார்கள். அக்பர், கொடுமையான வரிகளை எல்லாம் தள்ளிவிட்டார்; கவிகளையும் பாடகர்களையும் தம் சபைக்கு வரவழைத்துப் பல வெகுமதிகளைத் தந்தார்.

அவர் 'அபுல்பசல்' என்றவரை பிரதம மந்திரியாக வைத்துக்கொண்டார். அந்தப் பிரதம மந்திரி சம்ஸ்கிருதம், அரபி, பாரசீகம் முதலிய பாஷைகளைக் கற்ற வித்வான். அவர் அக்பரின் பிராண சிநேகிதர். இப்படிப் புகழ் பெற்ற அக்பர், 16-ஆம் நூற்றாண்டில் புகழுடனும் அன்புடனும் இந்தியாவை ஆண்டு வந்த மஹா சக்கரவர்த்தி ஆவார்.

## கேள்விகள்

1. அக்பர் சக்ரவர்த்தியின் குணாதிசயங்கள் எவை?

2. இராஜ புத்திர வீரர்கள் மொகலாய சாம்ராஜ்யத்திற்குச் செய்த நன்மைகள் எவை?

3. 'அபுல்பசல்' யார்? அவர் எத்தகைய குணமுள்ளவர்?

## 15. ஷாஜஹானும் தாஜ்மஹாலும்

ஷாஜஹான் அக்பரின் பேரன். அவர் பெரிய மொகலாய சக்கரவர்த்தி. அவரது தந்தையார் அக்பரின் இராஜ புத்திர மனைவிக்குப் பிறந்தவர். அவருடைய தாயும் இராஜபுத்திர ஸ்திரீ ஆதலால், ஷாஜஹானுக்கு இராஜ புத்திரர்களிடம் அதிக அன்பு இருந்தது.

27. ஷாஜஹான்

ஷாஜஹான் அழகிய உருவமும் கம்பீரத் தோற்றமும் உடையவர்; பெரிய போர் வீரர். அவர், இராஜ புத்திர ராஜ்யங்கள் அனைத்தும் தம் வசம் ஆக்கிக் கொண்டார்; தக்ஷிணத்தில் உள்ள ஆமத் நகரம் - பீஜப்பூர் சுல்தான்களைத் தோற்கடித்தார்.

ஷாஜஹான் ஆடம்பரங்களில் அதிக ஆசை உடையவர். இஸ்லாம் மதத்தில் அவருக்கு ஊக்கமுண்டு. அழகான கட்டடங்கள் கட்டுவதில் அவருக்கு விருப்பம் அதி

கம். அவர், தமது மனைவி மும்தாஜ் மஹாலிடம் மிகவும் அன்பு பாராட்டி வந்தார். அந்தப் பட்டத்து ராணி இறந்துவிட்டார். அதனால் அவர் அதிக துக்கத்தை அடைந்தார்; அவர் ஞாபகார்த்தமாக உலகப் பிரசித்தி பெற்ற தாஜ்மஹாலைக் கட்டினார்.



28. தாஜ் மஹால்

உலகத்தில் ஏழு பெரிய அதிசயங்கள் உண்டு. அவற்றுள் புகழ் வாய்ந்தது யமுனை நதிக்கரையில் கட்டப்பட்ட தாஜ்மஹால் கட்டடம். தாஜ்மஹால் சலவைக் கல்லால் கட்டப்பட்டுள்ளது. இருபதாயிரம் ஆட்கள் இதைக் கட்ட வேலை செய்தார்கள். இதைக் கட்ட இருபது வருஷ காலம் வேண்டி இருந்தது. முப்பது

லக்ஷம் ரூபாய் செலவழிந்தது. நிலாக் காலத்தில் தாஜ் மஹாலைப் பார்த்தவர்கள் அதிசயத்து நிற்பதுண்டு. இவ்வளவு அழகான கட்டடம் உலகத்தில் வேறு எதுவும் இல்லை. இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியர்கள் இந்த அதிசயமும் அழகும் வாய்ந்த கட்டடத்தைக் கண்டு பிரமிப்பது வழக்கம்.

29. ஷாஜஹான் தாஜ்மஹாலைப் பார்த்துக்கொண்டே இறத்தல்

ஷாஜஹான் ஒரு புதிய நகரத்தை ஸ்தாபித்தார்; பல வயிரங்கள் அடங்கிய மயில் சிம்மாசனத்தையும் செய்வித்தார்; அழகு வாய்ந்த சபா மண்டபத்தையும் கட்டினர்; முத்து மசூதியையும் ஜம்மா மசூதியையும் கட்டி முடித்தார்.

இந்தப் பெரிய சக்கரவர்த்தி, தம் குமாரர் அவுரங்கசீபால் கடைசிக் காலத்தில் துன்புறுத்தப்பட்டார்; கிழ வயதில் தாம் கட்டின தாஜ் மஹாலைப் பார்த்துக் கொண்டே 1666-ல் இறந்தார். இவர் கட்டிய தாஜ் மஹாலையும் பிற கட்டிடங்களையும் பார்க்கும்போதெல்லாம் இவர் ஞாபகம் நமக்கு வருகிறது.

### கேள்விகள்

1. தாஜ்மஹாலை உலக அதிசயங்களுள் ஒன்றாக ஏன் எண்ண வேண்டும்?

2. ஷாஜஹான் செய்த பாராட்டத் தகும் செயல்கள் எவை?

## 16. கிளைவ் பிரபு

கிளைவ் என்ற ஆங்கிலேயர் பத்தொன்பதாம் வயதில் இந்தியாவிற்கு வந்தார்; கிழக்கு இந்தியக் கம்பெனியில் கணக்குப் பார்க்கும் உத்தியோகத்தில் அமர்ந்தார்.

இவர் சிறு வயதில் நல்ல குணங்கள் இல்லாதவராக இருந்தார்; பள்ளிக்கூடம் சரிவரப் போகமாட்டார்; மாணவர்களுடன் அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டு இருப்பார்; சிறிதும் பயம் இல்லாமல் பெரிய கோவில்களின் மீது ஏறுவார். கிளைவின் தாய் தந்தையர் மிக்க கவலை கொண்டு, இவரை இந்தியாவுக்கு அனுப்பி விட்டார்கள். இந்தியாவிற்கு வந்தவுடன் வெகு விரைவில்

புகழ் பெற்றுப் பெரிய நிலைமைக்கு வந்தார். இவரே இந்தியாவில் ஆங்கிலேய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தவர்.

பிரான்சு தேசம் இங்கிலாந்து தேசத்திற்கு அருகில் இருக்கிறது. இந்த இரண்டு தேசத்தாரும் இந்தியாவில் சண்டை போட்டுக்கொண்டு இருந்தார்கள். ஆர்க்காட்டு

30. கிளைவ் பிரபு

நவாபும் பிரஞ்சியர் பக்கம் இருந்தார். கிளைவ் கணக்கு வேலையை விட்டுவிட்டு ஒரு சேனையுடன் ஆர்க்காட்டுக் கோட்டையைத் தாக்கினர். அது சுலபமாகக் கிளைவ் ஆதீனத்தில் விழுந்து விட்டது. கர்னடக நவாப் ஆர்க்காட்டைத் தாக்கினர். ஆனல் கிளைவ், வெகு தைரியத்

துடன் எதிரி வசம் அகப்படாமல் போரிட்டு வந்தார். இதனால் அவருக்குப் பெரும் புகழ் உண்டானது.

ஆங்கிலேயரின் நண்பரான மகம்மத் அலி என்ற நவாப் வம்சத்தவர், கிளைவ் உதவியினால் பிரஞ்சியரைத் திருச்சிக் கோட்டையிலிருந்து துறத்திவிட்டார். புதுச்சேரியில் இருந்த பிரெஞ்சு கவர்னர் **ட்யூப்ளே**, இயன்ற மட்டும் பாடுபட்டும், ஆங்கிலேயரை வெல்ல முடியவில்லை. இந்த ஆங்கிலேய வெற்றிக்கெல்லாம் காரணம் கிளைவின் திறமையே ஆகும்.

31. ட்யூப்ளே

பிறகு கிளைவ் பிரபு ஒரு பெரிய சேனையுடன் வங்காளத்தின்மீது படை எடுத்தார்; அங்கு ஆண்டு வந்த 'சுராஜி டவுலா' என்ற நவாபின் சேனையை **ப்ளாஸ்ஸி** என்னும் இடத்தில் தோற்கடித்தார்; இதனால் வங்காளம் முழுவதும் ஆங்கிலேயர் வசம் வந்தது; பிறகு டில்லி சக்ரவர்த்தியையும், அயோத்தி நவாப்பையும் தோற்கடித்துப் புகழ் பெற்றார்; வங்காளத்தைக் கவர்னராக இருந்து ஆண்டு வந்தார்.

கிளைவின் செயல்கள் மிகவும் பாராட்டத் தக்கவை. அவரே ஆங்கில அரசாட்சிக்கு முக்கிய காரணமாக இருந்தவர்; தென் இந்தியாவையும் வங்காளத்தையும் ஆங்கிலேயர் வசமாக்கின தீரர். அவர் 1760-ல் இங்கிலாந்துக்குச் சென்றூர்.

இராபர்ட் கிளைவ் தம் தீரத் தன்மையிஞலும் ஊக்கத்திஞலும் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை இந்தியாவில் ஸ்தாபித்தார். இராபர்ட் கிளைவ் ஆங்கில அறிஞர்களில் புகழ் பெற்றவர் ஆவர்.

### கேள்விகள்

1. கிளைவ் பிரபு சிறுவயதில் எப்படி நடந்துகொண்டார்?
2. அவர், ஆர்க்காட்டில் நடந்த யுத்தத்திலும் பிளாஸி யுத்தத்திலும் எப்படிப் புகழ் பெற்ருர்?

## 17. விக்டோரியா மஹா ராணியார்

விக்டோரியா மஹாராணியார் உலகம் எங்கும் புகழ் பெற்ற சக்ரவர்த்தினி. அவர் 1819-ஆம் வருஷத்தில் பிறந்தார்; 1837-ல் பட்டத்துக்கு வந்தார். அப்போது அவருக்கு வயது பதினெட்டே.

இராணியார், குழந்தையாக இருக்கும் போது எதையும் குறித்த காலத்தில் செய்வது வழக்கம்; முறை தப்பாமல் எல்லாக் காரியங்களையும் செய்து வந்தார்; குதிரைச் சவாரி, பாடங்கள் படிப்பது முதலிய எல்லாப்

பயிற்சிகளையும் அந்த அந்த நேரத்தில் குறைவு இன்றிச் செய்து வந்தார்.

விக்டோரியா மஹா ராணியார் நன்ருகக் கல்வி கற்றவர்; அன்பும் அடக்கமும் உடையவர்; குடிகளிடம் கருணை மிக்கவர். அவர், 1858-ஆம் வருஷம் சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகு இந்தியாவை ஆளத் தொடங்கினர்; இந்தியரை மிகவும் அன்புடன் ஆண்டு வந்தார்; இந்திய அரசர்கள் நன்மையே தமது விருப்பம் என்றும் வெளியிட்டனர்; ஜாதி வித்தியாசம் இல்லாமல் மக்களின் நன்மையைக் கருதி ஆண்டு வந்தனர்.

32. விக்டோரியா மஹா ராணியார்

கி. பி. 1901-ல் விக்டோரியா மஹா ராணியார் மரணம் அடைந்தார். விக்டோரியா மஹா ராணியார், குடிகளைத் தண்டிக்காமல் அவர்களிடம் கருணை காட்டி அவர்கள் சுகத்தைத் தேடுவதே தம் நோக்கமாகக் கொண்டு இருந்தார்.

இங்கிலாந்தில் இவர் 64 வருஷம் அரசு புரிந்தார். இவர் அனுப்பிய வைசிராய்கள் இந்தியருடைய நன்

மையையும் குடிகள் சுகத்தையும் கருதி அரசு செலுத்தி வந்தனர்; மதபேதம் இன்றி அரசு செலுத்தி வந்தனர். துரைத்தன உத்தியோகங்கள் மதபேதம் இன்றிப் படிப்பு யோக்கியதை உள்ள எல்லாருக்கும் அளிக்கப் படும் என்று இராணியார் வாக்குறுதி அளித்தார். இந்த மஹா ராணியார் காலத்தில் இந்தியா முழுவதும் அமைதியும், சுகமும், சந்தோஷமும் நிறைந்து இருந்தன.

### கேள்விகள்

1. மஹா ராணியார் இந்தியரிடம் கருணையும் அன்பும் உடையவர் என்பது நமக்கு எப்படித் தெரியவருகிறது?

2. இராணியாரின் குணாதிசயங்கள் எவை?

## 18. ஸ்தல சரித்திரம்

இந்தியாவில் புகழ் பெற்ற நகரங்கள் பல உண்டு. ஒவ்வொரு நகரத்திலும் பழைய காலத்தில் நடந்த சம்பவங்களையும் புகழ் பெற்ற மன்னர்கள் செய்த நன்மைகளையும் இப்போதும் சரித்திர உதவியால் அறியக் கூடும்.

நமது தலைநகரான சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டை பழமையானது. அங்கிருக்கும் கிழக்குக் கோட்டை வாசலும் உயர்ந்த கொடிமரமும், செயின்டு மேரி மாதா கோவிலும் பல வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டவை. மயிலாப்பூரில் செயின்ட் தாமஸ்

ஞாபகார்த்தமாக ஒரு பெரிய கோவில் இருக்கிறது. அதன் அருகில் கடியாரம் இல்லாமல் மணி பார்க்கும் கல் உருளைக் கருவியைப் பார்க்கலாம். அடையார் ஆற்றுக்கு அருகில்தான் பிரெஞ்சுக்காரரும் கர்னாடக நவாபின் வீரரும் சண்டை இட்டனர். ஸெயின்ட் தாமஸ் சம்பந் தப்பட்ட பறங்கி மலையில் உள்ள மாதா கோவில் பழமை



33. சென்னை, ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை

யானது. லார்டு கார்ன்வாலிஸ், தாமஸ் மன்ரோ, லார்டு ரிப்பன், விக்டோரியா மஹா ராணியார் இவர்களுடைய உருவச் சிலைகளைச் சென்னையில் பார்க்க லாம். மைலாப்பூரில் கபாலீஸ்வரர் ஆலயத்தைப் பார்க்க லாம். சென்னை திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி ஸ்வாமி கோவில் சிறப்புற்றது. இந்த முக்கியமான இடங்

களைப் பார்ப்பது சரித்திரத்தில் ஊக்கத்தை உண்டாக்கும்.

நம் இராஜதானியில் முக்கிய நகரங்கள் காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை என்பனவே. தஞ்சாவூரில் பிரஹதீஸ்வரர் கோயிலும் கோட்டையும் இராஜராஜ சோழனல் கட்டப்பட்டுள்ளன. திருச்சிராப்



34. திருச்சி—மலைக் கோட்டை

பள்ளியில் மலைக்கோட்டை இருக்கிறது. அதைப் பார்த்தால், அது, மகம்மத்அலி காலத்தில் பிரஞ்சு வீரர்கள் எளிதில் உள் நுழைய முடியாத நிலையில் இருந்திருக்கலாம் என்பது தெரிய வரும். சந்தா சாஹிப்பைப் புதைத்த கோரியையும் அங்குக் காணலாம். திருச்சியின் அருகில் 'பூலோக வைகுண்டம்' என்று சொல்லப்படும் ஸ்ரீரங்கத்தையும் நாம் காணலாம்.

மதுரைமா நகரில் மீனாக்ஷி அம்மன் கோவிலையும், மங்கம்மாள் சத்திரத்தையும், திருமலை நாயக்கர் அரண்மனையையும் காணலாம்.




35. தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் கோவில்

பெரிய கோட்டைகளுள் செஞ்சிக் கோட்டை ஒன்று. அது, அவுரங்கசீப் காலத்திலும், இராஜா தேசிங்கு காலத்திலும், 'புஸ்ஸி' என்ற பிரஞ்சு சேனைத் தலைவர் காலத்திலும் வெகு கஷ்டப்பட்டே பல வருஷங்களுக்குப் பிறகு பிடிக்கப்பட்டது.

மஹாபலிபுரம், ஹம்பி முதலிய நகரங்கள் பல்லவ ராஜாக்கள் சிறப்பையும், விஜயநகர ராஜாக்கள் கீர்த்தியையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

இத்தகைய நம் புகழ் பெற்ற தேச சரித்திரத்தைப் படித்து நாம் களிப்போமாக.



36. செஞ்சிக் கோட்டை

## கேள்விகள்

1. சென்னை மாநகரத்தில் யாருடைய உருவச் சிலைகள் இருக்கின்றன? அவை எங்கே இருக்கின்றன?

2. கீழ்க் கண்ட பட்டணங்களில் உள்ள விசேஷப் பொருள்கள் எவை?

(1) தஞ்சாவூர். (2) திருச்சிராப்பள்ளி.
(3) மதுரை. (4) செஞ்சி.